பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

**இதழ் : 11** **றபீஉல் ஆகிர் - 1433** **பெப்ரவரி - 2012**

# தானியத்திற்கான ஸகாத் அளவும் அதன் முக்கியத்துவமும்

-அஷ்ஷெய்க் MCM. றிஸ்வான் (மதனி)

இஸ்லாத்தின் ஐம்பெருங்கடமைகளில் ஸகாத்தும் ஒன்றாகும். அல்லாஹ்வின் அருட்கொடையான செல்வத்தைப் பெற்ற மனிதன் இக்கடமையினை நிறைவேற்ற வேண்டும். தொழுகை பற்றி அல்குர்ஆனில் குறிப்பிடப்படும் அநேக இடங்களில் ஸகாத்தும் இணைத்துக் கூறப்படுவது அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

ஸகாத் கொடுப்பதன்மூலம் கொடுக்கும் மனிதன் தூய்மைப்படுத்தப்படுகின்றான். அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான்: 'அவர்களின் செல்வங்களில் இருந்து அவர்களைத் தூய்மைப்படுத்திப் பரிசுத்தமாக்கும் ஸகாத் எடுப்பீராக' (அத்தௌபா : 103).

ஸகாத் கொடுக்க மறுப்பவனுக்குரிய தண்டனை பற்றி நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

'யார் தனக்கு அல்லாஹ் வழங்கிய செல்வத்திலிருந்து அதன் ஸகாத்தைக் கொடுக்கவில்லையோ மறுமையில் அவனுக்காக வழுக்கைத் தலையையுடைய ஒரு விஷப்பாம்பு சாட்டப்படும். அதன் இரு கண்களுக்கும் மேலாக இரு கரும்புள்ளிகள் இருக்கும். அது அவனது உடலைச்சுற்றி வளைத்துக்கொள்ளும். பின்னர் அது அவனது கன்னங்களைத் தீண்டியவாறு 'நான் உனது செல்வம், நான் உனது பொக்கிஷம்' எனக்கூறும். பின்னர் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் யார் உலோபித்தனம் செய்கின்றார்களோ அது தமக்கு நல்லது என்று அவர்கள் நிச்சயமாக எண்ணவேண்டாம். அவ்வாறன்று, அது அவர்களுக்குத் தீங்குதான். அவர்கள் உலோபித்தனத்தினால் சேர்த்துவைத்த (பொருட்கள்) எல்லாம் மறுமையில் அவர்கள் கழுத்தில் அரிகண்டமாகப் போடப்படும் (புஹாரி).

மார்க்க விடயங்களையும் த.்.வா செய்திகளையும் உங்கள் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ள follow evrtj என்று Type செய்து 40404க்கு SMS அனுப்பி வையுங்கள். இது முற்றிலும் இலவசமானது. (Airtel வலையமைப்பைத் தவிர)

நபியவர்களின் மரணத்தின் பின் சில மனிதர்கள் தாங்கள் இஸ்லாத்தின் அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுவோம், ஆனால் ஸகாத்தை மாத்திரம் தங்களால் தர முடியாது என்று கூறிய போது, கலீபா அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் பின்வருமாறு சூளுரைத்தார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக, அல்லாஹ்வின் தூதர் உயிரோடிருந்த போது ஸகாத்தாக கொடுத்து வந்த ஒட்டகம் கட்டும் கயிற்றையேனும் என்னிடம் ஸகாத்தாக தர முடியாது என்று யாராவது கூறினால் அதை தராமல் இருந்ததற்காக அவர்களோடு யுத்தம் செய்து அதைப் பெற்றுக்கொள்வேன் (புஹாரி, முஸ்லிம்)

இந்தளவுக்கு ஸகாத் மிகவும் முக்கியத்துவமிக்கதாகும். அது பெரும்பாலான தனவந்தர்கள் செய்வது போன்று தாம் நினைத்தவாறு ஒரு பங்கை கொடுக்கின்ற ஒரு கடமையல்ல. அதற்கென அளவுகள் மார்க்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்த அளவுகள் கணக்குப் பார்த்து கொடுக்கப்படவில்லையானால் நிச்சயம் அது ஸகாத்தாக நிறைவேறாது.

ஸகாத் விதியாகும் பொருட்களில் தானியமும் ஒன்றாகும். தானியம் எனும்போது நெல்லும் அதில் அடங்கும். இந்த வகையில் நெல்லுக்கான ஸகாத்தினை நிறைவேற்றவேண்டும்.

**தானியத்திற்கான ஸகாத் விதியாகும் அளவு (நிஸாப்)**

அபூஸஈத் அல் குத்ரிய்யி றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஐந்து 'வஸகு'களுக்கு குறைந்த பழங்களுக்கும், தானியங்களுக்கும் ஸகாத் விதியாவதில்லை (முஸ்லிம்)

ஒரு 'வஸக்' என்பது 60 கொத்துகளாகும். ஒரு கொத்து என்பது சராசரி மனிதனின் இருகைகளாலும் நான்கு முறை எடுப்பதைக் குறிக்கும்.

தற்கால அளவீட்டில் 2600 கிராம் ஆகும்.
எனவே ஐந்து வஸகுகள் என்பது 2600 கிராம் X 60 X 5 = 780 கிலோ கிராம்

இந்த வகையில் 780 கிலோ கிராம் நெல்லினை அறுவடையாகப் பெறும் ஒருவர் அதற்கான ஸகாத்தினை நிறைவேற்றவேண்டும்.

**ஸகாத் கொடுக்கும் அளவு**

மழைநீர், இயற்கை நீர்ப்பாசனம் மூலம் நீர் பெற்றிருப்பின் 1/10 உம், ஒட்டகத்தைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்யின் 1/20 உம் ஸகாத் விதியாகும். (முஸ்லிம்)
எனவே ஒருவர் தனது வேளாண்மையினை அறுவடைசெய்யும்போது 780 கிலோ கிராம் நெல்லினை விளைச்சலாகப் பெறும்போது செலவுகள் நீங்கலாக மேற்குறித்த அளவின்படி ஸகாத்தினை நிறைவேற்ற வேண்டும்.

**எப்போது நிறைவேற்ற வேண்டும் ?**

அதனை அறுவடை செய்யும் நாளில் நீங்கள் அதன் ஹக்கினை(ஸகாத்தினை) கொடுத்துவிடுங்கள். ( அல் அன்ஆம் : 141 )

இந்த வகையில் ஒருவர் தனது வேளாண்மையினை அறுவடை செய்யும் நாளில் அல்லாஹ்வின் இக்கடமையினை நிறைவேற்றவேண்டும். அல்லாஹ் இக்கடமையினை சரிவர நிறைவேற்ற அருள்புரிவானாக.

## வரலாற்றில் ஓர் ஏடு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவுக்கு வந்த போது கஃபாவில் சிலைகள் இருந்ததால் உள்ளே நுழைய மறுத்து அவற்றை அப்புறப்படுத்துமாறு கட்டளையிட்டார்கள். உடனே அவை அப்புறப்படுத்தப்பட்டன. அச்சிலைகளில் (குறிபார்ப்பதற்குரிய) அம்புகளை கையில் தாங்கியவாறு இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம், இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம் ஆகியோரின் உருவங்களும் இருந்தன. அவற்றையும் வெளியேற்றினார்கள். (இவ்விரு நபிமார்களுக்கும் சிலை கட்டியதற்காக) அல்லாஹ் இவர்களை அழிப்பானாக. இவ்விரு நபிமார்களும் அம்புகள் மூலமாக குறி பார்ப்பவர்களாக ஒரு போதும் இருக்கவில்லை என்பதை இதைச் செய்தவர்கள் அறிந்தே வைத்திருக்கிறார்கள் என்று கூறிவிட்டு நபியவர்கள் கஃபாவிற்குள் நுழைந்தார்கள். அதில் தொழவில்லை

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் றழியல்லாஹு அன்ஹுமா
நூல் : ஸஹீஹுல் புஹாரி

ஸஹீஹுல் புஹாரியிலிருந்து

## ஸகாத் வழங்குவது குறித்து...

**ஹதீஸ் 1395.**
இப்னு அப்பாஸ் றழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் முஆதை யமனுக்கு (ஆளுநராக) அனுப்பினார்கள். அப்போது அவரிடம், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை, நான் நபி என்ற உறுதிமொழியின் பால் அவர்களை அழைப்பீராக! இதற்கு அவர்கள் கட்டுப்பட்டால் தினமும் ஐவேளைத் தொழுகையை இறைவன் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அவர்களுக்கு அறிவிப்பீராக! இதற்கும் அவர்கள் கட்டுப்பட்டால் அவர்களில் செல்வந்தர்களிடம் பெற்று, ஏழைகளுக்கு வழங்குவதாக அவர்களின் செல்வத்தில் இறைவன் ஸகாத்தைக் கடமையாக்கியிருக்கிறான் என்பதை அறிவிப்பீராக! என்று கூறினார்கள்.

**ஹதீஸ் 1396.**
அபூ அய்யூப் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் ஒருவர் வந்து, என்னைச் சுவர்க்கத்தில் சேர்க்கும் ஒரு (நற்) செயலை எனக்குக் கூறுங்கள் எனக் கேட்டார். அப்போது நபித் தோழர்கள் (வியப்புற்று) இவருக்கென்ன (ஆயிற்று)? இவருக்கென்ன (ஆயிற்று)? என்றனர். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவருக்கு ஏதோ தேவையிருக்கிறது (போலும்)! (என்று கூறிவிட்டு அவரிடம்) நீர் அல்லாஹ்வை வணங்கவேண்டும்: அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது: தொழுகையை நிலை நாட்ட வேண்டும்: ஸகாத் வழங்க வேண்டும்: உறவினர்களிடம் இணக்கமாக நடக்க வேண்டும் என்று கூறினார்கள்.

**ஹதீஸ் 1397.**
அபூ ஹுரைரா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

கிராமவாசி ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் வந்து, நான் சுவர்க்கம் செல்வதற்கேற்ற ஒரு காரியத்தை எனக்குக் கூறுங்கள் என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், நீர் அல்லாஹ்வை வணங்க வேண்டும். அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது. கடமையான தொழுகையையும் கடமையான ஸகாத்தையும் நிறைவேற்ற வேண்டும். ரமழானில் நோன்பு நோற்கவேண்டும் என்றார்கள். அதற்கவர் என் உயிர் எவன் கைவசத்தில் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! இதைவிட அதிகமாக எதையும் செய்ய மாட்டேன் என்றார். அவர் திரும்பிச் சென்றதும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சுவர்க்கவாசிகளில் ஒருவரைப் பார்க்க விரும்புவோர் இவரைப் பார்க்கட்டும் என்றார்கள்.

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

- தொடர் 03

**(தொடர் 02ல் தொழுகையில் கிப்லாவை முன்னோக்குதல், தடுப்பு (ஸுத்றா) வைத்துக்கொள்ளல் ஆகியன பற்றி ஆராயப்பட்டது)**

**3) ஸப்பில் நேராகவும் நெருக்கமாகவும் நிற்றல்**

* ஜமாஅத்தாக தொழும் போது ஸப்புகளில் நேராகவும் நெருக்கமாகவும் நிற்பது மிகவும் வலியுறுத்தப்பட்ட ஒரு கடமையாகும். நபியவர்கள் ஸப்புகளில் நேராக நிற்கும் விடயத்தில் அதிகமதிகம் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். ஸஹாபாக்கள் ஸப்புகளில் நேராகவும் நெருக்கமாகவும் நிற்கும் வரை நபிகளார் தொழுகையை ஆரம்பிக்கமாட்டார்கள். அதுமட்டுமன்றி, ஸஹாபாக்கள் நேராக நிற்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்காக நபியவர்கள் ஸப்புகளுக்குள் சென்று ஸஹாபாக்களின் தோள்களைத் தடவிச்செல்வார்கள் (ஸஹீஹ் முஸ்லிம்).

நபியவர்கள் கூறினார்கள்: ‘உங்களது ஸப்புகளை நேராக வைத்துக் கொள்ளுங்கள். இல்லையேல் அல்லாஹ் உங்களுக்கு மத்தியில் வேற்றுமையை ஏற்படுத்துவான்’(ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்).

மேலும் நபிகளார் கூறினார்கள்: ‘உங்கள் ஸப்புகளை நேராக வைத்திருங்கள். ஸப்புகளை நேராக வைத்திருப்பதில்தான் தொழுகையின் பூரணத்துவம் தங்கியிருக்கிறது’ (ஸஹீஹ் முஸ்லிம்)



* நேராக மட்டுமன்றி நெருக்கமாகவும் நிற்றல் வேண்டும். ஸஹாபாக்கள் எப்படி நெருக்கமாக நின்றார்கள் என்பது பற்றி அனஸ் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் : ‘எங்களில் ஒருவர் தனது தோற்புயத்தை மற்றவரின் தோற்புயத்தோடும் தனது பாதத்தை மற்றவரின் பாதத்தோடும் சேர்த்து வைத்து தொழுவார்கள்’ (ஸஹீஹுல் புஹாரி).

ஆனால் இன்று பள்ளிவாசல்களில் தொழுகின்ற பெரும்பாலானோர் ஸப்புகளில் நெருக்கமாக நிற்பதுமில்லை, ஸஹாபாக்கள் நின்றது போன்று தோளோடு தோள் சேர்த்தும் பாதத்தோடு பாதத்தை சேர்த்தும் நிற்பதுமில்லை. ஜமாஅத் தொழுகையின் முக்கியமான ஒரு நோக்கம் முஸ்லிம்களுக்கு மத்தியில் அன்பும் ஒற்றுமையும் நிலவ வேண்டும் என்பதாகும். ஸஹாபாக்கள் நின்றது போன்று ஸப்புகளில் நிற்கும் போதுதான் அன்பும் ஒற்றுமையும் ஏற்பட முடியும்.

ஆயினும் மிக அதிகமானோர் ஒருவரோடு ஒருவர் கோபித்துக்கொண்டு நிற்பது போன்றுதான் ஸப்புகளில் தள்ளித் தள்ளி நிற்கிறார்கள். நெருக்கமாக நிற்பதற்காக யாராவது ஒருவர் நெருங்கிச் சென்றாலும் பலர் விலகிச் செல்வதையே அதிகம் காணமுடிகிறது. தொழுகை நடாத்துகின்ற கதீப்மார் நேராக நிற்குமாறு சொல்வது மாத்திரமன்றி, தோளோடு தோள், பாதத்தோடு பாதம் சேர்த்து நிற்குமாறும் கூறுவதோடு, மஃமூம்கள் நேராகவும் நெருக்கமாகவும் நிற்கிறார்களா என்பதைப் பார்த்த பின்பே தொழுகையை ஆரம்பிக்க வேண்டியதும் அவசியமாகும். இதுவே நபிகளாரின் வழக்கமான நடைமுறையாகும்.

* ஒரு ஸப்பை பூர்த்தியாக்கிய பின்பே அடுத்த ஸப்பில் நிற்க வேண்டும்.

நபியவர்கள் ஸஹாபாக்களிடம் ‘வானவர்கள் தமது இறைவனிடம் ஸப்பாக நிற்பது போன்று நிற்கமாட்டீர்களா?’ என்று கேட்டார்கள். ‘வானவர்கள் எப்படி நிற்பார்கள்? ’ என்று கேட்டோம். அதற்கு நபியவர்கள் ‘வானவர்கள் ஆரம்ப ஸப்புகளை (இடைவெளியின்றி) பூரணப்படுத்துவார்கள். ஒவ்வொரு ஸப்பிலும் நெருக்கமாக நிற்பார்கள்’ என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் , அபூதாவூத்)

இன்றைய தொழுகையாளிகளில் அதிகமானோர் முன் ஸப்புகளில் இடம் இருக்கும் போதே பின் ஸப்புகளில் வந்து நின்று தொழும் காட்சியை காண முடிகிறது. இவ்வாறு தொழுபவர்களின் தொழுகை பூரணத்துவம் அடையாது என்பது கவனத்திற்கொள்ளத்தக்கதாகும்.

நபியவர்கள் கூறினார்கள்: ‘உங்கள் ஸப்புகளில் ஷைத்தான்களுக்கு இடைவெளி வைக்காதீர்கள். யார் ஸப்புகளில் அடுத்தவர்களோடு சேர்ந்து நிற்கிறார்களோ அவர்களை அல்லாஹ் சேர்த்துக்கொள்வான். யார் ஸப்புகளில் விலகி நிற்கிறார்களோ அல்லாஹ்வும் அவர்களை விட்டும் விலகி விடுவான்’ (அபூதாவூத்)

**4) தொழுவதாக மனதில் நினைத்தல் (நிய்யத்)**

எந்தவொரு அமலாயினும் நிய்யத் அவசியமாகும். ‘நிச்சயமாக அமல்கள் யாவும் நிய்யத்தைக் கொண்டே நிறைவேறும்’ (ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்).

* உதாரணமாக ஒருவர் ஸுப்ஹ் தொழப் போகிறார் எனில் ‘அல்லாஹ்வுக்காக ஸுப்ஹ் தொழுகிறேன்’ என மனதில் நினைத்தால் அதுதான் நிய்யத்தாகும். இதற்கென அரபுமொழியில் சில வாசகங்களை மனனமிட்டு மொழிவது நிய்யத் அல்ல. இருந்தாலும் பெரும்பாலானோர், தொழுமிடத்தில் நின்று கொண்டு அதற்கென நேரமெடுத்து, உஸல்லி பர்ழ... என்றெல்லாம் மனமிடப்பட்ட வாசகங்களைக் கூறுகிறார்கள். ஆயினும் அரபுமொழி நன்றாகத் தெரிந்த நபியவர்களோ ஸஹாபாக்களோ தொழுகைக்கு நிற்கும் போதோ, நோன்பு நோற்கும் போதோ நிய்யத்தை வாயினால் மொழிந்ததில்லை. ஏனெனில், நிய்யத் என்ற அரபுச் சொல்லுக்கு ‘மனதில் நினைத்தல்’ என்பதே அர்த்தமாகும். எனவே அது உள்ளத்தில் இடம்பெற வேண்டுமேயன்றி வாயினால் கூறப்படக்கூடாது. மனதில் நினைக்க வேண்டியதை வாயினால் மொழிந்தால் அதற்கு நிய்யத் என்று சொல்லப்படவும் மாட்டாது. மனதால் நினைக்குமாறு நபியவர்கள் கட்டளையிட்டிருக்கும் போது ‘இல்லை, இல்லை, நாங்கள் வாயினாலும் மொழிவோம்’ என்று பிடிவாதமாக இருப்பது நபியவர்களைப் புறக்கணிப்பதாகும்.

அதே நேரம் அனைத்து வணக்கங்களுக்கும் நிய்யத் அவசியம் என்று இஸ்லாம் குறிப்பிடுகின்ற போது தொழுகைக்கும் நோன்புக்கும் மாத்திரம் நிய்யத்தை வாயினால் மொழிவது எந்த வகையில் நியாயமாகும் என்று சிந்திக்க வேண்டும். அல்குர்ஆன் ஓதுதல், திக்ர், ஸதகா, துஆ, ஸலவாத் போன்ற இன்னும் பல வணக்கங்கள் இருக்கின்றன. இவற்றுக்கும் நிய்யத் அவசியமாகும். நிய்யத்தை வாயினால் மொழிய வேண்டும் என்று கூறுவோர் ஏன் இந்த வணக்கங்களைச் செய்யும் போது வாயினால் நிய்யத்தை மொழிவதில்லை?

- இன்ஷா அல்லாஹ் தொடரும்...

# கசப்பான உண்மை

கண்களில் வெண்படலம் உள்ளோரின் நலன்கருதி ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் கடந்த 31.01.2012 அன்று இலவச கண் பரிசோதனை மற்றும் கண் சத்திர சிகிச்சை முகாம் ஒன்றை மட்/அல்அஸ்ஹர் மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடாத்தியது. இலங்கை ஜம்இய்யதுஷ் ஷபாப் அமைப்பு இதற்கு அனுசரணை வழங்கியிருந்தது.

இது தொடர்பான அறிவித்தலை மக்களுக்கு வழங்கும் பொருட்டு ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் ஏறாவூரிலுள்ள பள்ளிவாசல்களுக்கு பொது அறிவித்தல்களை அனுப்பிவைத்தது. இவ் இலவச முகாமில் சுமார் 170 பேர் கலந்துகொண்டு தமது கண்களைப் பரீட்சித்ததோடு அவர்களுள் 27 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. அல்ஹம்து லில்லாஹ்.

இதில் மிகவும் மனவேதனை தரும் உண்மை என்னவெனில், அதிகமான பள்ளிவாசல்கள் அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தலை ஒலிபெருக்கியில் அறிவித்த அதே வேளை, ஒரு சில பள்ளிவாசல்கள் - குறிப்பாக ஏறாவூர் பிரதேசத்திலுள்ள ஒரு பிரபல ஜும்ஆ பள்ளிவாசல் உட்பட- நமது அறிவித்தலை ஒலிபெருக்கியில் அறிவிக்கவுமில்லை, தங்களது பகுதி மக்களுக்கு இது குறித்து தெரியப்படுத்தவுமில்லை. இப்பள்ளிவாசல் பகுதிகளைச் சேர்ந்த பல ஏழை மக்கள் ஏதோ ஒருவகையில் பின்னர் கேள்விப்பட்டு கண் பரிசோதனை முகாம் நடைபெற்று முடிந்த பின்னர் எம்மிடம் வந்து தமக்கு இதுபற்றி அறிவிக்கப்படவில்லையே என்று கூறி மிகவும் கவலைப்பட்டனர். தமக்கு கிடைக்கவிருந்த ஒரு நலனை ஏன் இப்பள்ளிவாசல் நிருவாகத்தினர் தடுத்து நிறுத்தினர் என்றும் ஆதங்கப்பட்டனர்.

நடைபெற்று முடிந்த இக் கண் சத்திர சிகிச்சை மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். இத்தகைய சத்திர சிகிச்சையொன்று மேற்கொள்வதாயின், சுமார் ஐம்பதாயிரம் தொடக்கம் ஒரு லட்சத்து முப்பதாயிரம் வரை செலவாகும் எனவும் பொது மக்களின் நலன்கருதி இதை இலவசமாக செய்வதாகவும் இதற்கு வருகை தந்த வைத்தியர்கள் தெரிவித்தனர். இத்தகைய பெறுமதிவாய்ந்த சத்திர சிகிச்சையை பொதுமக்கள் இலவசமாக பெறுவதை ஏன் பள்ளிவாசல் நிருவாகத்தினர் தடுத்தனர் என்பது புரியவில்லை.

இந்த கண் சத்திரசிகிச்சைக்கென்று பாகிஸ்தானிலிருந்து விசேடமாக கண் வைத்திய நிபுணர் வருகை தந்திருந்தார். அவரோடு கொழும்பிலிருந்தும் சிலர் வருகை தந்திருந்தனர். ஓட்டமாவடி, காத்தான்குடி போன்ற பல பிரதேசங்களில் பல நூற்றுக்கணக்கான மக்கள் இதன் மூலம் பயனடைந்த அதே வேளை, நமது ஏறாவூர் பிரதேச மக்களில் பலர் இப்பயனை அடைந்துகொள்ள முடியாதவாறு இப்பள்ளிவாசல் நிருவாகிகள் தடுத்தமைக்கு காரணம் என்ன?

ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் அனுப்பிவைத்த இவ் அறிவித்தல் மார்க்கம் சம்மந்தப்பட்டதல்ல, மக்களின் நலன் சார்ந்ததாகும். அதைக் கூட வாசிக்க முடியாத அளவுக்கு இவர்களது உள்ளங்கள் சுருங்கிவிட்டனவா என்று பாதிக்கப்பட்ட மக்கள் வினவுகின்றனர்.

பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கு சொந்தமானவை. மக்கள் நலன் சார்ந்த அம்சங்கள் எவையாயினும் அவற்றுக்கு பள்ளிவாசல்களில் இடம்வழங்கப்பட வேண்டும். மக்களுக்கு கிடைக்கவிருந்த ஒரு நலனை கிடைக்காமற் செய்தமை பற்றியும் பள்ளிவாசலை தமது விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப நடத்தியமை பற்றியும் மறுமையில் அல்லாஹ் விசாரித்தால் இவர்கள் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், மற்றும் ஏனைய பள்ளிவாசல்களின் நிருவாகங்கள், பொது அமைப்புகள் இது குறித்து அக்கறை செலுத்த வேண்டும் என தயவாய் வேண்டுகிறோம்.

# குர்ஆனில் விஞ்ஞானம்

### -இரு கடல்களுக்கிடையே தடுப்பு-

அவன்தான் இரு கடல்களையும் ஒன்று சேர்த்தான். ஒன்று, மிக்க இனிமையும் சுவையுமுள்ளது. மற்றொன்று உப்பும் கசப்புமானது - இவ்விரண்டிற்குமிடையே வரம்பையும், மீற முடியாத ஒரு தடையையும் ஏற்படுத்தியிருக்கின்றான். (அல்குர்ஆன் 25:53)

இந்தப் பூமியை வசிக்கத் தக்க இடமாக ஆக்கியவனும், அதனிடையே ஆறுகளை உண்டாக்கியவனும், அதற்காக (அதன் மீது அசையா) மலைகளை உண்டாக்கியவனும் இரு கடல்களுக்கிடையே தடுப்பை உண்டாக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் அறியாதவர்களாக இருக்கின்றனர். (அல்குர்ஆன் 27:61)

இன்னும் இரண்டு கடல்கள் சமமாக, ஒன்று மிகவும் இனிமையாக, (தாகம்தீரக்) குடிப்பதற்குச் சுவையாக இருக்கிறது. மற்றொன்று உவர்ப்பாக, கசப்பாக இருக்கிறது. எனினும் இவை ஒவ்வொன்றிலிருந்தும் நீங்கள் சுவையான (மீன்) மாமிசத்தை உண்ணுகின்றீர்கள். இன்னும், (முத்து, பவளம் போன்ற) ஆபரணமாக நீங்கள் அணிவதையும் எடுத்துக் கொள்கிறீர்கள், மேலும் (அல்லாஹ்வின்) அருளை நீங்கள் தேடிக்கொள்வதற்காக (நீங்கள் பிரயாணம் செய்யும் போது) கப்பல்கள் நீரைப்பிளந்து செல்வதையும் நீங்கள் காண்கிறீர்கள் - இதற்கு நீங்கள் நன்றி செலுத்துவீர்களாக!
(அல்குர்ஆன் 35:12)

அவனே, இரண்டு கடல்களையும் ஒன்றோடொன்று சந்திக்கச் செய்தான். (ஆயினும்) அவற்றிடையே ஒரு தடுப்பும் இருக்கிறது. அதை அவை மீறமாட்டா. (அல்குர்ஆன் 55:19-20)

திருக்குர்ஆன் பல இடங்களில் இரண்டு கடல்கள் சங்கமமாகும் இடத்தில் அவ்விரண்டுக்கும் இடையே ஒரு பலமான தடையையும், தடுப்பையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறுகிறது.

கடல் பற்றி ஆய்வு செய்பவர்கள் இதை ஆராய்ச்சி செய்து இரு கடல்கள் சங்கமமாகும் இடங்களில் இரண்டு தண்ணீரும் சுவையிலும், அடர்த்தியிலும், உப்பின் அளவிலும் வேறுபட்டிருப்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இது எழுதப் படிக்கத் தெரியாத முஹம்மது நபியவர்களுக்கு 14 நூற்றாண்டுகளுக்கு முன் எப்படி தெரியும்?

எனவே, திருக்குர்ஆன் இறைவனின் வார்த்தைதான் என்பதற்கு இதுவும் சான்றாக இருக்கிறது.

(நன்றி - http://www.tamililquran.com)

# ஓர் அமெரிக்கப் பேராசிரியரின் உணர்ச்சிகரமான முதல் தொழுகை அனுபவம்

எழுதுவதற்கு முன்பு கடைசியாக கருணையாளனிடம் மன்றாடினேன்.

“மகத்தான இறைவனே! என் அதிபதியே! மீண்டும் நாத்திகப் பாதையில் நான் செல்ல முனைந்தால் என்னை அழித்துவிடு! மகத்தானவனே! நிகரில்லா அன்புடையோனே! அந்தக் கணமே எனக்கு மரணத்தைத் தந்துவிடு. குறைபாடுகளுடனும், பலவீனங்களுடனும் கூட வாழ்ந்துவிடலாம். ஆனால், உன்னை நிராகரித்த நிலையில் ஒரு நாளும் என்னால் உயிர்வாழ முடியாது”.

-ஜெ.ஃப்ரி லேங், அமெரிக்க கன்ஸாஸ் பல்கலைக்கழக கணிதப் பேராசிரியர்.

இஸ்லாத்தை தழுவும் மேற்கத்தியர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவரும் அதே சமயம் அவர்கள் இஸ்லாத்தைத் தழுவ காரணமான திருப்பங்களையும் அவர்களின் அப்போதைய மன ஓட்டத்தையும் அவர்கள் விவரிக்கும்போது அவர்கள் மட்டுமின்றி அதை கேட்கும், பார்க்கும், படிக்கும் நமக்கும் மட்டிலா மகிழ்ச்சி உண்டாகிறது. ஓர் அமெரிக்கர் இஸ்லாத்தைத் தழுவும்போது தனக்குண்டான அனுபவத்தை விவரிப்பதை - அதுவும் சுவைபட விவரிப்பதை காண்போமா?

ஜெ.ஃப்ரி லேங் அமெரிக்காவிலுள்ள மிகப்பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றான University of Kansaas ன் கணிதப் பேராசிரியராவார். இவர் “Even Angels Ask” (வானவர்களும் கேட்கிறார்கள்) எனும் தலைப்பில் நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். அந்த நூலில் இடம்பெற்றுள்ள இதயத்தைத் தொடும் பகுதியான “எனது முதல் தொழுகை” யைத்தான் இங்கு நாம் காணப்போகிறோம். அவர் அனுபவித்த இறைநம்பிக்கையின் - ஈமானின் சுவையை அவரது வாசகங்களிலேயே நாம் உணர முடியும்.

இஸ்லாத்தை எனது வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்ட சில தினங்களுக்குள்ளாகவே பள்ளிவாசல் இமாம் என்னிடம் ஒரு புத்தகத்தைத் தந்துவிட்டார். கையடக்கமான அழகிய நூல் அது. பளபளப்பான தாள்களில் வண்ண வண்ண அச்சுகளில் தேவையான இடங்களில் வரைபடங்களுடன் இருந்த தொழுகைப்பற்றிய கையேடு அது. தொழுகையில் ஓத வேண்டிய இறைவசனங்களின் மொழிபெயர்ப்பும் அதில் இடம் பெற்றிருந்தது.

அன்று இரவு விடுதிக்குத் திரும்பியதும் நான் தூங்கப் போகவில்லை. இன்றைக்கே ஆரம்பித்துவிட வேண்டியதுதான் என்ற உறுதி எனக்குள் எழுந்தது. நண்பர்களின் ஆலோசனையை நான் பொருட்படுத்தவில்லை. என் இறைவனை - என்னைப் படைத்தவனை - எனக்கு வாழ்வளித்தவனை - அவன் காட்டிய வழியில் தொழவேண்டும் என்று மனம் பரபரத்தது. இனி மூச்சுள்ளவரை தொழுகையாளியாகவே திகழ வேண்டும் என்ற தணியாத ஆசையும் ஆர்வமும் பெருக்கெடுத்தது.

ஆர்வமும் உறுதியான எண்ணமும் மனதில் நிரம்பியிருக்க, மங்கலான வெளிச்சத்தில் எனது அறையில் அந்த நூலை வாசிக்க ஆரம்பித்தேன். அது ஒரு புது அனுபவமாக இருந்தது. எனக்குள் இனம் புரியாத உணர்வுகள் பொங்கின. திரும்பத் திரும்ப சின்ன நூலான அதைப் புரட்டிப் புரட்டிப் படித்தேன்.

எனது பாடங்கள், எனது வகுப்புகள், மனைவி, மக்கள் எல்லாவற்றையும் மறந்தேன். அந்த புத்தகத்தில் ஆழ்ந்து போனேன். தொழுகையில் ஓத வேண்டிய அறபு வார்த்தைகளையும், குர்ஆன் வசனங்களையும் அப்படியே திரும்பத் திரும்பக் கூறி மனனம் செய்ய முயன்றேன். வசனங்கள், பிரார்த்தனைகளின் பொருளை நெஞ்சில் பதித்துக் கொண்டேன்.

கடைசியில், என்னால் தொழ முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது. என் உள்மனம் அப்படித்தான் சொன்னது. எனது வாழ்நாளின் முதல் தொழுகையை நிறைவேற்ற முடிவு செய்தேன். அப்போது நள்ளிரவு ஆகிவிட்டிருந்தது. எனவே இஷா தொழுகையை நிறைவேற்ற தீர்மானித்தேன்.

குளியலறைக்கு விரைந்தேன். தொழுகை கையேட்டை பக்கத்தில் வைத்துக்கொண்டு அதைப்பார்த்துப் பார்த்து வுழூ செய்ய ஆரம்பித்தேன். புதிதாக ஒரு பொருளை சமைக்க முனையும் மாணவியைப் போல புத்தகத்தைப் பார்த்துப் பார்த்து எல்லாவற்றையும் செய்தேன். ஒவ்வொன்றையும் நிதானமாக - மிக நிதானமாக கவனத்துடன் செய்தேன். வுழூ நீர் முகத்தில் சொட்டச் சொட்ட அப்படியே அறைக்குத் திரும்பினேன்.

அறை நடுவே நின்றுகொண்டேன். கிப்லாவின் திசையைக் கவனித்து கிப்லா நோக்கி நின்று கொண்டேன். அறைக்கதவு மூடப்பட்டிருக்கிறதா என்று ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டேன். நீண்ட பெருமூச்சு விட்டேன். கைகளை விரித்து காதுவரை உயர்த்தினேன். காது நுனிவரை கையை உயர்த்தி மிகவும் நிம்மதியுடன் உரக்கக் கூறினேன், “அல்லாஹு அக்பர்” - இறைவன் மிகப்பெரியவன்.

யாரும் எனது குரலைக் கேட்டிருக்கமாட்டார்கள் என்று எனக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. அந்த நடுநிசியில் யார்தான் விழித்திருப்பார்கள்? திடீரென்று எனக்கொரு எண்ணம் பொறிதட்டியது. யாராவது மறைந்திருந்து என்னைப் பார்த்துக் கொண்டிருப்பார்களோ...! ஜன்னல் கதவு மூடாதது என் நினைவுக்கு வந்தது. பக்கத்து அறைக்காரர் என்னை இந்த நிலையில் பார்த்துவிட்டால் என்ன நினைப்பார்கள்? நான் திரும்பினேன். ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தேன்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்...


## உங்களது கணணி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?

உங்களது கணணி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு எங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் கணணிகளை இலகுவாக திருத்திக் கொள்ள முடியும். தேவைப்படின் அழையுங்கள் உங்கள் வீடுகளுக்கே வந்து நாம் எமது சேவைகளை வழங்கவும் காத்திருக்கின்றோம்.

**சேவைகள்**

01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues

**இன்றே அழையுங்கள்**
**0772300420**

## மாதம் ஒரு துஆ

**ஒருவரை பயணத்திற்காக வழியனுப்பி வைக்கும் போது...**

أَسْتَوْدِعُ اللَّهَ دِينَكَ وَأَمَانَتَكَ وَخَوَاتِيمَ عَمَلِكَ

**அஸ்தவ்திஉல்லாஹ தீனக வஅமானதக வகவாதீம அமலிக**

பொருள்: உங்களது மார்க்கத்தையும் உங்களது குடும்பம், செயற்பாடுகள் அனைத்தையும் உங்களது இறுதி முடிவையும் பாதுகாக்க வேண்டுமென்று அல்லாஹ்விடம் வேண்டுகிறேன்.

ஆதாரம் : அபூதாவூத்

## இறுதிப் பயணம் மறுமை - 03

**-அஷ்ஷெய்க் MIM. வபா (கபூரி)**

கடந்த இருதொடர்களிலும் மரணத்தையும் மரண நேரத்தில் பாவியான மனிதர்களின் அவலநிலை பற்றியும் பார்த்தோம். இனிநாம் ஒருவருக்கு ஸக்ராத் நிலை ஏற்பட்டதை சுற்றி இருப்பவர்கள் அறிந்துகொண்டால் என்ன செய்யவேண்டும் என்பதையும், என்ன செய்யக்கூடாது என்பதையும் பார்ப்போம்.

ஸக்ராத் நிலையில் ஒருவர் இருக்கிறார் என்று தெரியவந்தால் அவருக்கு நாம் செய்யவேண்டியதென்ன?

1- அவருக்கு அல்லாஹ்வைப் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதாவது அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன், அல்லாஹ் கருணையுள்ளவன், இரக்கமுள்ளவன், அவன் தண்டிக்கமாட்டான் என்பன போன்ற விடயங்களையும் அல்லாஹ்வின் அன்பு, கருணை, மன்னிக்கும் தன்மை பற்றிய விடயங்களையும் அவரது காதில் கேட்கும்படி பேசவேண்டும். ஏனெனில் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் 'அல்லாஹ்வைப் பற்றிய நல்லெண்ணம் கொள்ளாதவரை உங்களில் யாரும் மரணிக்கவேண்டாம்' என்று கூறியுள்ளார்கள்.

2- அவருக்கு கலிமாவை ஞாபகப்படுத்தவேண்டும். ஏனெனில் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுறைறா றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் கூறுகின்றார்கள்: 'மரணநிலையில் இருப்பவர்களுக்கு (கலிமா) 'லாயிலாஹ இல்லல்லாஹு'வை சொல்லிக் கொடுங்கள். ஏனென்றால் எவருடைய கடைசிவார்த்தை 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்று இருக்குமோ அவர் சுவனம் நுழைவார்'. எனவே, அருகிலிருப்போர் 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்று கூறுங்கள் என்று ஸக்றாதில் இருப்பவருக்கு கூற வேண்டும்.

3- அந்த இடத்தில் கூடி இருந்துகொண்டு தேவையற்ற வீண் வார்த்தைகள் பேசக்கூடாது. அவரைப்பற்றி நல்லதைக் கூறவேண்டும். ஏனெனில் நீங்கள் கூறுபவற்றிற்கு மலக்குகள் ஆமீன் கூறுகின்றார்கள் என்று நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.

5- றூஹுபிரிந்துவிட்டது என்று தெரிந்தால் அவரது கண்களை கசக்கி மூடிவிட வேண்டும். ஏனெனில் றூஹைக் கொண்டு செல்லும் மலக்கை கண் தொடர்ந்து செல்லுமென்று நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். மையித்தின் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் மெதுமெதுவாக அசைத்து எலும்புகள் விறைப்பாக ஆகமுன் உரிய இடத்தில் வைக்கவேண்டும்.

6- அழுதுபுலம்பி ஒப்பாரிவைத்தல் கூடாது. இதைப்பற்றி நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயமாக மையித்தின் குடும்பத்தினரின் அழுகையினால் மையித் வேதனை செய்யப்படுகின்றது என்று கூறியுள்ளார்கள். இலேசாக கண்ணீர்விடுவதால் பிரச்சினையில்லை. கன்னத்தில் அடித்து சட்டைகளைக் கிழித்து ஒப்பாரிவைத்தல் ஜாஹிலிய்யா பழக்கமாகும். இவ்வாறு செய்பவர்கள் எம்மைச்சேர்ந்தவரல்ல என்று நபி அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

7-அவரது கடன்கள், அவரது வஸிய்யத்துக்கள் போன்றவற்றை விரைவாக நிறைவேற்றிடவேண்டும். கடன் அடைபடாத நிலையில் மரணம் வருவதை பயந்து கொள்ளவேண்டும். ஒரு மு.ஃமினின் ஆன்மா அவரது கடன் அடைபடும் வரை அவரது கடனுடன் தொங்கிய நிலையில் இருந்துகொண்டிருக்கும் என்று நபி அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் நபிகளார் கடனாளியாக இருக்கும் ஜனாஸாவை தொழுவிக்க மறுத்துள்ளார்கள்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்...

## தெரிந்து கொள்ள...
## சில நாடுகளின் புனைப் பெயர்கள்

1. உலகின் சர்க்கரைக் கிண்ணம் ~ கியூபா
2. அதிகாலையில் அமைதியாக இருக்கும் நாடு ~ கொரியா
3. ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் ~ ஹங்கேரி
4. முடிவில்லா நாடு ~ ரோமாபுரி
5. புனித பூமி ~ பலஸ்தீன்
6. ஐரோப்பாவின் விளையாட்டரங்கம் ~ சுவிட்ஸர்லாந்து
7. மரகதத் தீவு ~ அயர்லாந்து
8. ஐரோப்பாவின் போர்க்களம் ~ பெல்ஜியம்
9. முத்துத் தீவு ~ பஹ்ரைன்
10. ஐரோப்பாவின் நோயாளி ~ துருக்கி

~ AAM. ஸுமைஸ்
முஹாஜிரீன் கிராமம், மீராகேணி

# ஐயமும் தெளிவும்

**ஐயம்** : தனியாகத் தொழும் போதும் ஜமாஅத்தாகத் தொழும் போதும் காலுறை அணிந்து தொழுவது கடமையா?

\- JF. ஸஜிதா, ஏறாவூர் 03

**தெளிவு** : பெண்கள் அந்நிய ஆண்களுக்கு முன்னிலையில் தமது இரு பாதங்களையும் மறைத்துக்கொள்ள வேண்டும் என்பது பல ஹதீஸ்களில் காணப்படுகின்ற பொதுவான விதியாகும்.

இதற்கேற்ப பல அந்நிய ஆண்கள் முன்னிலையில் ஒரு பெண் தொழும் போது மேற்கூறப்பட்ட பொதுவான விதியின் அடிப்படையில் தனது இரு பாதங்களையும் மறைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆயினும் அந்நிய ஆண்கள் இல்லாத இடத்தில் அல்லது வீட்டில் பெண்கள் தனியாக தொழும் போது பாதங்களை மறைப்பது தொடர்பில் அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேற்றுமை காணப்படுகிறது. சிலர் பாதங்களை மறைப்பது கடமை என்றும் சிலர் கடமை இல்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

பெண்கள் அந்நிய ஆண்கள் இல்லாத இடத்தில் அல்லது தனியாக தொழும் போது பாதங்களை மறைக்க வேண்டும் என்பதற்கு ஆதாரபூர்வமான ஹதீஸ் எதுவும் காணப்படவில்லை. இது தொடர்பில் உம்மு ஸலமா றழியல்லாஹு“அன்ஹா அவர்கள் மூலமாக பின்வரும் ஒரு ஹதீஸ் அறிவிக்கப்படுகிறது. ஒரு பெண் கீழாடை இல்லாமல் மேலாடையுடனும் தலையை மறைத்தும் தொழ முடியுமா? என்று நான் நபியவர்களிடம் கேட்டேன். அதற்கு நபியவர்கள், ‘அவளது மேலாடை அவளது இரு பாதங்களின் மேற்பகுதியை மறைக்கக் கூடியதாக இருந்தால் தொழ முடியும்’ என பதிலளித்தார்கள்.

அபூதாவூதில் இடம்பெற்றிருக்கும் இந்த ஹதீஸை நோக்கும் போது ஒரு பெண் தனது இரு பாதங்களின் மேற்பகுதியை தொழுகையில் மறைப்பது கடமை என்பது தெளிவாகிறது. ஆயினும் இந்த ஹதீஸ் நபியவர்களினால் அறிவிக்கப்பட்ட ஆதாரபூர்வமான ஹதீஸ் அல்ல என்றும் இது பலவீனமான ஹதீஸ் என்றும் இந்த ஹதீஸை தனது நூலில் பதிவுசெய்த இமாம் அபூதாவூத் அவர்கள் உட்பட பல இமாம்கள் குறிப்பிட்டுள்ளனர். இது உம்மு ஸலமா றழியல்லாஹு“அன்ஹா அவர்களின் சொந்த அபிப்பிராயமாக இருப்பினும் அதுவும் பலவீனமானதே என ஹதீஸ்கலை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனவே, தனியாக தொழும் பெண்கள் பாதங்களை மறைக்க வேண்டியது கடமை என்பதற்கு ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் இல்லை என்பது தெளிவாகிறது. ஆதாரம் இல்லாத ஒரு விடயத்தை மார்க்க கடமை என்று குறிப்பிடுவது ஆபத்தானதாகும். ஆயினும் ஒரு பெண் தொழும் போது மார்க்க கடமை என்ற அடிப்படையில் அல்லாமல் சாதாரணமாக பாதங்களை தான் அணிந்திருக்கும் மேலாடையினாலோ அல்லது காலுறைகளினாலோ மறைத்துக்கொண்டால் அதில் குற்றமில்லை. அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

## க.பொ.த [உ/த], க.பொ.த [சா/த], தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் தேறி பல்கலைக்கழக பிரவேசத்தைப் பெற்றுக்கொண்ட மாணவர்களையும், க.பொ.த (சா/த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் A தரத்தைப் பெற்ற மாணவர்களையும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களையும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்றை ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் கடந்த 03.02.2012 அன்று மட்/அறபா வித்தியாலயத்தில் வெற்றிகரமாக நடாத்தி முடித்தது. அல்ஹம்து லில்லாஹ்.

இந்நிகழ்வில் க.பொ.த (உ/த) பரீட்சையில் தேறி பல்கலைக்கழக பிரவேசத்தைப் பெற்றுக்கொண்ட 59 மாணவர்களும், க.பொ.த (சா/த) பரீட்சையில் 9A தரத்தைப் பெற்ற 11 மாணவர்களும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தகுதி பெற்ற 62 மாணவர்களும் அவர்களுக்கு கற்பித்த 11 ஆசிரியர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கையில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ள இம்மூன்று பரீட்சைகளிலும் சித்தியடைவதற்காக மாணவ, மாணவியர் தாம் கற்கும் காலங்களில் அனுபவித்த சிரமங்கள், மேற்கொண்ட தியாகங்கள் வீண்போகாதவாறு அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியை நல்கியிருப்பதை பாராட்டும் நோக்கிலும் எதிர்காலத்தில் இத்தகைய பரீட்சைகளுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவும் அண்மைக்காலமாக சிறிதளவு வீழ்ச்சியை சந்தித்திருக்கும் ஏறாவூர் பிரதேச கல்விநிலை முன்னேற்றம் காண வேண்டும் எனும் நோக்கிலுமே இப்பாராட்டு வைபவம் ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் ULM. ஸெய்னுத்தீன் அவர்களும் பிரதம பேச்சாளராக பிரபல மார்க்க பிரசாரகர் அஷ்ஷெய்க் MLM. முபாரக் மதனி (MA) அவர்களும் கௌரவ அதிதியாக ஏறாவூர் கோட்டக்கல்வி அதிகாரி அல்ஹாஜ் ILZ. ஆப்தீன் அவர்களும் விசேட அதிதிகளாக ஏறாவூரிலுள்ள பாடசாலைகளின் அதிபர்களும் கலந்துகொண்டதோடு, நலன் விரும்பிகள், பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

**மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:**

**ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள,**

**யூரோ போன் வேர்ல்ட்,**

**இல.17, பிரதான வீதி, ஏறாவூர்**

Fax: 065 2240283

**சிட்டி லிங், லங்கா பெல் ரீலோட் செய்துகொள்ளலாம்**

**மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.**

## ஐயமும் தெளிவும்

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்

உங்களது கணணி தகமைகளை **CGS** உடன் இணைந்து பெற்றுக் கொள்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**CGS**
College for Tech Studies
Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94772300420, +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

**CGS இன் கணணி கற்கை நெறிகள்**

* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids

தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் அவரவர் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்து கற்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் 0772300420

ஒவ்வொரு வாரமும் சனி, மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

## பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஏழு கேள்விகள்

1. வானவர்கள் அல்லாஹ் முன்னிலையில் ஸப்புகளில் எவ்விதம் அணிவகுத்து நிற்பார்கள்?
2. மாலைதீவு ஜனாதிபதி பதவி விலகிய பின் தற்போது அப்பதவியைப் பொறுப்பேற்றிருப்பவர் யார்?
3. இஸ்லாத்தைத் தழுவிய அமெரிக்கப் பேராசிரியர் முன்னர் எக்கொள்கையில் இருந்தார்?
4. மரணத் தறுவாயில் இருப்போருக்கு சுற்றி இருப்போர் என்ன சொல்லிக் கொடுக்க வேண்டும்?
5. 5 வஸக்குகள் என்பதன் தற்போதைய அளவு யாது?
6. இரு வேறுபட்ட கடல்களின் இணைப்பு பற்றி கூறும் அல்குர்ஆன் வசனம் இடம்பெறும் ஒரு அத்தியாயம் எது?
7. அண்மையில் இலங்கையில் கொண்டாடப்பட்ட சுதந்திர தினம் எத்தனையாவது சுதந்திர தினம்?

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **16.03.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். தெரிவுசெய்யப்படுவோர் பரிசு வழங்குதலை இலகுபடுத்துவதற்காக 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி : **தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**1ம் இடம் : UF**. வஸீமா, வாசிகசாலை வீதி, ஏறாவூர் 01**A**

**2ம் இடம் : UL**. ஸாஹிர் ஹுஸைன், பெண் சந்தை வீதி, ஏறாவூர் 01**B**

**3ம் இடம் : MJ**. பாதிமா ஷதா, தைக்கா வீதி, ஏறாவூர் 1**A**

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. AM. ஆதில் ஹஸன், ஜின்னா வீதி, ஐயங்கேணி, ஏறாவூர் 03
2. MIF. மஹ்பூபா, ஓடாவியார் வீதி, ஏறாவூர் 02
3. MS. அன்பஸ், பெண் பாடசாலை வீதி, ஏறாவூர் 03
4. TA. அஸீமுல் ஹக், RC வீதி, ஏறாவூர் 06
5. ARA. றிப்கி, புன்னைக்குடா வீதி, ஏறாவூர் 03

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. ஸூறா அந் நஜ்ம் (53:3,4)
2. பாதிமிய்ய ஆட்சியாளர்கள்
3. அநுராதபுரம்
4. பிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள்
5. அத்தஹிய்யாத்தில் வரும் ஸலவாத்
6.. 11 : 6
7. ஷேக் ஹமாத் பின் கலீபா

**வாசகர்கள் அனுப்பியுள்ள ஆக்கங்களுள் தரமானவை காலதாமதமேற்படினும் இன்ஷாஅல்லாஹ் அவ்வப்போது பிரசுரிக்கப்படும்.**